**கவனிக்க.**-2019.04.12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2120 - 2019 අප්‍රේල් මස 18 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.04.18

*2120 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 18 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 970 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2019, மே மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, ஏப்பிறல் மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*967-B 81514-5,403 (2019/04)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

***3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :***

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலூவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

***4. பணிக்கமர்த்தும் நியதிகள் :***

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லூத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலூவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லூப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

*1.* ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

*2.* பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

*3.* பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

*4.* மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

*5.* பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

*6.* பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

*7.* வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலூம்.

*8.* பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லூமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

*9.* ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

*10.* கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லூமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

*11.* பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

*12.* பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

*13.* பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

*14.* தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

*15.* பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

*16.* பரீட்சார்த்தியல்லூத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லூத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லூவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லூ விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலூல் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## விவசாயத் திணைக்களம்

இலங்கை விவசாயப் பாடசாலைகளில் விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறியினை பயில்வதற்காக 2020 /2022 ஆம் கற்கையாண்டுக்காக மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை - 2019

இலங்கை விவசாயப் பாடசாலைகளில் விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறிக்கு 2020/2022 ஆம் கல்வியாண்டிற்கு அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சை - 2019 இற்கான விண்ணப்பப்பத்திரம் கோரப்படுகின்றது. இப்பரீட்சையானது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் 2019 யூலை மாதத்தில் சில பிரதான நகரங்களில் அமைக்கப்படவுள்ள பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும்.

02. **விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா :**

2.1 விவசாயத் திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் இலங்கை விவசாயப் பாடசாலைகளில் விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறி நடாத்தப்படுகின்றது. இக்கற்கைநெறியானது இரண்டரை வருட காலப்பகுதியைக் கொண்டது. இக்கற்கை நெறியானது மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் இக்கற்கைநெறிக்கு தேசிய தொழிற்கல்வி தகைமை (NVQ) தரம் 6 மட்டம் வழங்கப்படுகின்றது.

2.2 இக்கற்கைநெறியானது ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானது. இப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு நேர்முகப் பரீட்சை ஒன்று நடாத்தப்பட்டதன் பின்னர் திறமை மற்றும் மாவட்ட அடிப்படையில் அங்குணுகொலபெலஸ்ஸ, கரப்பிஞ்ச, குண்டசாலை, பெல்வெஹர, வவுனியா ஆகிய விவசாயப் பாடசாலைகளுக்கு தெரிவு செய்யப்படுவார்கள்.

2.3 நேர்முகப் பரீட்சையானது தகைமை பெற்றவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளைப் பரீட்சிப்பதற்காக மாத்திரமே நடாத்தப்படுகின்றது.

2.4 இக்கற்கைநெறியானது முழுமையாக ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படும்.

2.5 இக்கற்கைநெறியைப் பூர்த்தி செய்வதற்கு விவசாயப் பாடசாலைகளில் 2 வருட பயிற்சியினை பெற்ற பின்னர் தேசிய பயிலுனர் மற்றும் தொழிற்பயிற்சி அதிகார சபையின் (NAITA) மேற்பார்வையின் கீழ் 6 மாத காலத்திற்கு தொழில் சார் பயிற்சி ஒன்றை பெயர் குறிப்பிடப்படும் நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொள்வது கட்டாயமாகும்.

2.6 இக்கற்கைநெறிக்கு விடுதி வசதி வழங்கப்படும் அடிப்படையிலும்/விடுதி வசதி வழங்கப்படாத அடிப்படையிலும் மாணவர்கள் அனுமதிக்கப்படுவதுடன் தற்சமயம் விடுதிகளில் நிலவும் வசதிகளுக்கேற்ப விடுதி வசதி வழங்கப்படும்.

03. **கற்கைநெறிக்கு அனுமதி பெறுவதற்கு காணப்பட வேண்டிய தகைமைகள் :**

3.1 கல்வித் தகைமைகள்

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். சிங்களம் /தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய மூன்று பாடங்களிலும் கட்டாயமாக திறமைச் சித்தி அல்லது அதை விட உயர்வான சித்திகளை பெற்றிருப்பதோடு, மேலும் ஒரு பாடத்திலும் திறமைச் சித்தி அல்லது அதை விட உயர்வான சித்தியினை பெற்றிருத்தல் வேண்டும். ஆங்கில மொழியில் ஆகக்குறைந்தது சாதாரண சித்தியாவது (S) இருத்தல் வேண்டும்;

அத்துடன்

க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவில் கல்வி பயின்று உயிரியல், பௌதீகவியல், இரசாயனவியல் ஆகிய மூன்று பாடங்களுக்கு தோற்றி அதில் குறைந்தது ஒரு பாடத்திலேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்,

அல்லது

க. பொ. த. உயர் தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவில் கல்வி பயின்று உயிரியல், விவசாயம், இரசாயனவியல் ஆகிய மூன்று பாடங்களுக்கு தோற்றி அதில்குறைந்தது ஒரு பாடத்திலேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்,

அல்லது

க. பொ. த. உயர் தர பரீட்சையில் தொழில்நுட்பவியல் துறையில் கல்வி பயின்று உயிரியல் தொழில்நுட்பம், தொழில்நுட்பவியல் துறைக்கான விஞ்ஞானம், விவசாயம் ஆகிய மூன்று பாடங்களுக்கு தோற்றி அதில் ஒரு பாடத்திலேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்,

அல்லது

க. பொ. த. உயர் தரப் பரீட்சையில் தொழில்நுட்பவியல் துறையில் கல்வி பயின்று பொறியியல் தொழில்நுட்பம், தொழில்நுட்பவியல் துறைக்கான விஞ்ஞானம், விவசாயம் ஆகிய மூன்று பாடங்களுக்கு தோற்றி அதில் ஒரு பாடத்திலேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**முக்கியம்** - க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் உயிரியல் துறை மற்றும் தொழில்நுட்பவியல் துறை ஆகிய பிரிவுகளில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று பாடங்களின் சேர்க்கைகளும் தவிர்ந்த வேறேதும் பாடமொன்றினை கல்வி பயின்றிருந்தால் அது தகைமையாகக் கொள்ளப்படமாட்டாது.

விவசாயப் பாடசாலைகளுக்கு மாணவர்களை தெரிவு செய்யும்போது மாவட்ட மட்டத்தில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்த மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

3.2 விண்ணப்பதாரிகள் 2019.05.21 ஆந் திகதியன்று 17 வயதிற்குக் குறையாமலும் 25 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதனடிப்படையில் வயது தொடர்பான தகைமையினை பூரணப்படுத்தும் விண்ணப்பதாரியின் பிறந்த தினமானது 2002.05.21 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னராகவோ 1994.05.21 ஆந் திகதி அல்லது அதற்கு பின்னராகவோ இருத்தல் வேண்டும்.)

3.3 இக்கற்கைநெறியானது விவசாயச் செயற்பாடுகளுடன் தொடர்பான செய்முறை பயிற்சிகளை உள்ளடக்கிய கற்கைநெறி ஒன்றாகும். எனவே இக்கற்கைநெறியினை பயில்வதற்காக நீங்கள் தெரிவு செய்யப்பட்டால் இக்கற்கைநெறியினை தொடர்வதற்கு நீங்கள் உடலியல் மற்றும் மனநல ரீதியாக பொருத்தமானவர் என அரச வைத்தியர் ஒருவரினால் பெறப்பட்ட வைத்தியச் சான்றிதழ் ஒன்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.

3.4 இக்கற்கைநெறியினை பயில்வதற்கு மதகுருமார் தகுதியுடைவராகமாட்டார்கள்.

3.5 அரசாங்க சேவையில் தொழில் புரிபவர்கள் இப்போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையவராக மாட்டார்.

04. **கற்கைநெறிக்காக விண்ணப்பப்படிவங்கள் கோரல் :**

4.1 இவ்விளம்பரத்தின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக விண்ணப்பப்படிவங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தினால் அல்லது தட்டச்சு செய்யப்பட்டு அல்லது கணினி தட்டச்சு செய்யப்பட்டு 8" x 12" (A4) அளவுள்ள தாளின் இருபக்கங்களிலும் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் 01 முதல் 09 வரையான விபரங்கள் முதல் பக்கத்தில் அடங்குதல் வேண்டும். 10 - 14 வரையிலான விபரங்கள் இரண்டாவது பக்கத்திலும், மிகுதி மூன்றாம் பக்கத்திலும் அடங்குமாறு விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். அத்துடன் விண்ணப்பப்படிவமானது பரீட்சைக்கு தோற்றவுள்ள மொழி மூலமாகவே நிரப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை தயாரிக்கும் போது சிங்கள மொழி மூல விண்ணப்பப்படிவங்களில் அதன் தலைப்பில் பரீட்சையின் பெயரை சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழி மூல விண்ணப்பதாரிகள் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் பரீட்சையின் பெயரை குறிப்பிடுதல் வேண்டும். இவ்வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக அமையாத விண்ணப்பப்படிவங்களும், பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பப்படிவங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். எனவே விண்ணப்பப்படிவத்தினை அனுப்புவதற்கு முன்பாக பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவமானது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப அமைந்துள்ளதா என்பதனையும் சகல தகவல்களும் விண்ணப்பப்படிவத்தில் சரியான முறையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பது தொடர்பாகவும் உரிய பரீட்சை கட்டணமானது செலுத்தப்பட்டு அது தொடர்பான விபரங்களை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுவதுடன் பற்றுச்சீட்டானது விண்ணப்பப்படிவத்தில் உரிய முறையில் ஒட்டப்பட்டுள்ளதா என்பதனையும் விண்ணப்பதாரி கவனமாக பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும். மேலும் பூரணமாக நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவத்தின்

நிழற்படப் பிரதி ஒன்றையும் பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி ஒன்றையும் தம்வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாக அமையும்.

4.2 விண்ணப்பப்படிவத்தை விவசாயத் திணைக்களத்தின் வலைப்பின்னலில்(Website)இருந்து தரவிறக்கம் (Download) செய்து கொள்ள முடியும். (www.doa.gov.lk) பரீட்சைக் கட்டணம் ரூபா 500/- ஆகும். விண்ணப்பதாரி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இன் கீழ் அரச வருமானத்திற்கு வைப்பு செய்யும் விதத்தில் நாட்டிலுள்ள ஏதேனும் ஒரு தபால் அலுவலகம் /உப தபால் அலுவலகத்தில் அல்லது மாவட்ட செயலாளர் அலுவலகம் /பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பரீட்சைக்கட்டணத்தை செலுத்துதல் வேண்டும். பணம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் சரியான இடத்தில் பற்றுச்சீட்டின் ஒரு விளிம்பை மாத்திரம் ஒட்டி விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.மேலும் இப்பரீட்சைக் கட்டணத்திற்கு மேலதிகமாக வேறு எந்த அறவீடுகளும் அறவிடப்படுவதில்லை. மேலும் பரீட்சைக் கட்டணத்திற்காக காசுக்கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மேலும் எக்காரணத்தை கொண்டும் இப்பரீட்சைக் கட்டணமானது மீளளிக்கப்படமாட்டாது. அத்துடன் இப்பரீட்சைக்கட்டணத்தை வேறு எந்த பரீட்சைக்காகவும் மாற்றவும் முடியாது. இப்பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை இணைத்து அனுப்பி வைக்கப்படாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

4.3 சகல விண்ணப்பப்படிவங்களும் 2019, மே மாதம் 21 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியவாறு "பணிப்பாளர், விரிவாக்கற் பயிற்சி நிலையம், விவசாயத் திணைக்களம், பேராதனை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பப்படல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் தாமதமாகும் அல்லது காணாமற் போகும் விண்ணப்பப்படிவங்களுக்கு விவசாயத் திணைக்களம் பொறுப்பேற்காது.

4.4 விண்ணப்பப்படிவத்தினை அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "விவசாயப் பாடசாலைகளுக்கான அனுமதி 2020 /2022" என்னும் வாசகம் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

05. **பரீட்சை நிலையங்கள் :**

விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா பாடநெறிக்காக இலங்கை விவசாயப் பாடசாலைக்கு மாணவர்களைஅனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சையானது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மாத்திரம் 2019 யூலை மாதத்தில் கீழே தரப்பட்டுள்ள நகரங்களில் அமைக்கப்படும். பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும். பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது.

| நகர இல. | நகரம் |
|---|---|
| 1 | அனுராதபுரம் |
| 2 | பதுளை |
| 3 | மட்டக்களப்பு |
| 4 | கொழும்பு |
| 5 | காலி |
| 6 | யாழ்ப்பாணம் |
| 7 | கண்டி |

| நகர இல. | நகரம் |
|---|---|
| 8 | குருநாகல் |
| 9 | மாத்தறை |
| 10 | திருகோணமலை |
| 11 | வவுனியா |
| 12 | இரத்தினபுரி |
| 13 | அம்பாந்தோட்டை |
| 14 | கிளிநொச்சி |

குறிப்பிட்ட பரீட்சை நிலையமொன்றுக்குப் போதியளவு எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்காதவிடத்து, பரீட்சார்த்தியின் இரண்டாவது விருப்பில் தெரிவான பரீட்சை நிலையம் அல்லது பரீட்சார்த்திகள் விண்ணப்பித்த நகரத்திற்கு அண்மையிலுள்ள வேறு ஒரு பரீட்சை நிலையம் அவர்களுக்கு வழங்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்த நகரம் / நகரங்களை பின்னர் மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது. மேலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள சகல நகரங்களிலும் அல்லது பெரும்பாலான நகரங்களில் பரீட்சை நிலையங்களை அமைப்பதற்கு போதுமான விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து, பரீட்சையினை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் நடவடிக்கை எடுப்பார்.

06. இலங்கைப் பரீட்சை திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளில் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரிகளிடம் பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு கீழே தரப்பட்டுள்ள ஆவணங்களில் ஏதாவது ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய ஆள் அடையாள அட்டை;

II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு;

III. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம் .

07. **பரீட்சை முறைமை :**

7.1 எழுத்துப் பரீட்சைக்கான பாடங்கள் மற்றும் நேர அட்டவணை கீழே தரப்பட்டுள்ளன.

| பாடம் | காலம் | புள்ளிகள் |
|---|---|---|
| முதலாம் வினாத்தாள் (01)<br>விவசாயம் | 1 மணித்தியாலம் | 100 |
| இரண்டாம் வினாத்தாள் (02)<br>விவேகப் பரீட்சை | 1 மணித்தியாலம் | 100 |

மேலே தரப்பட்டுள்ள பாடங்களுக்கான பாடவிதானம் கீழே தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைவதற்கு ஆகக்குறைந்தது 25% புள்ளிகளை எடுத்தல் வேண்டும்.

1. விவசாயம் -

இவ்வினாப்பத்திரமானது க.பொ.த (சாதாரண தர) விவசாயப் பாடத்தின் பாடவிதானத்திற்கு அமைவாகவும் விவசாயத் துறையுடன் தொடர்பான பொதுவான விடயங்களை உள்ளடக்கியதாகவும் தயாரிக்கப்பட்ட பல்தேர்வு வினாக்கள் மற்றும் சுருக்க வினாக்களைக் கொண்டது. சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

2. விவேகப் பரீட்சை -

இவ்வினாப்பத்திரமானது ஒழுங்கமைப்பு, தொடர்பு காணல், ஊகித்தல், ஒப்பிடுதல், பகுத்தறிதல் போன்ற திறன்களை மதிப்பிடும் விதத்தில் தயாரிக்கப்படும். இது பல்தேர்வு வினாக்கள் மற்றும் சுருக்க வினாக்கள் 50 இனைக் கொண்டது. சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

7.2 வர்த்தமானிஅறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளுக்கு அமைவாக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயது எல்லைக்கு உட்பட்ட, விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்பாக உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டினை சரியான முறையில் இணைத்து, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைக்கும் சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப் பத்திரம் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் அனுப்பி வைக்கப்பட்டதன் பின்னர் உடனடியாக அது தொடர்பாக குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் பிரசுரிக்கப்படும். இப் பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்களின் பின்னரும் தமக்கான பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்கப் பெறாத பரீட்சார்த்திகள் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளையிற்கு அறியப்படுத்தல் வேண்டும். இவ்விதம் அறியப்படுத்தும் போது விண்ணப்பதாரி தோற்றவுள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியினை சரியாகக் குறிப்பிடல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியில் வசிப்பவராயின், மேலே கோரப்பட்டுள்ள தகவல்களுக்கு மேலதிகமாக பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை விரைவாகப் பெற்றுக் கொள்ள முடியுமான விண்ணப்பதாரியின் தொலை நகல் (Fax) இலக்கமொன்றையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதமொன்றினை பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலை நகல் இலக்கத்திற்கு அனுப்பி வைத்த பின்னர் அது தொடர்பாக அறியப்படுத்தல் மிகவும் பயனுள்ளதாக அமையும். இவ்வறியப்படுத்தலை மேற்கொள்ளும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படும் ஏதாவது தகவல் ஒன்றினை உறுதிப்படுத்துவதற்காக விண்ணப்பப்படிவத்தின்

பிரதி, பரீட்சை கட்டணத்தை செலுத்தியமையுடன் தொடர்பாகப் பற்றுச் சீட்டின் பிரதி, விண்ணப்பப்படிவத்தினை தபாலில் அனுப்பும் போது பெறப்பட்ட பதிவுத் தபாலிற்கான பற்றுச் சீட்டு ஆகியவற்றை தயார் நிலையில் தம்வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாக அமையும்.

7.3 விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்படுவதானது அவர் குறித்த பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளை பூரணப்படுத்தியுள்ளார் என்பதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என ஒருபோதும் கருதப்பட முடியாது.

7.4 விண்ணப்பப்படிவத்திலும், பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை அரசாங்க பாடசாலை அதிபர் ஒருவரால், ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவரால், பிரிவிற்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தரால், சமாதான நீதவான் ஒருவரால், சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவரினால், சட்டத்தரணி ஒருவரினால், பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால், முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரால், அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் நிரந்தர பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவரினால், பௌத்த விகாரை ஒன்றின் விகாராதிபதி அல்லது பிரதான மதகுரு ஒருவரினால், ஏனைய மத வழிபாட்டுத்தலம் ஒன்றுக்குப் பொறுப்பான பிரதான மதகுரு அல்லது விஷேட நிலையில் உள்ள மதபோதகர் ஒருவரினால் தமது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

7.5 விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றும் முதற் சந்தர்ப்பத்திலேயே தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரங்களை பரீட்சை நிலையத்தின் பிரதான மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

7.6 பரீட்சையினை நடாத்தல், பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக பரீட்சார்த்திகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்படல் வேண்டும். அத்துடன் இச்சட்ட திட்டங்களை மீறும் விண்ணப்பதாரிகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டியவராவார்.

7.7 இலங்கைப் பரீட்சைத் திணைக்களமானது விண்ணப்பதாரிகள் பெற்றுக் கொண்ட புள்ளிகள் தொடர்பான விபரத்தினை விண்ணப்பதாரிகளின் முகவரிக்கு அனுப்பி வைக்கும். பரீட்சார்த்தியொருவருக்கு இவ் எழுத்து மூல பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி அளித்தல் அல்லது நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அழைக்கப்படுதல் போன்றவற்றின் காரணமாக அவர் தகைமையுடையவர் எனக் கருத்திற் கொள்ள முடியாது. ஒரு பரீட்சார்த்தி பரீட்சைக்கு முன்னரோ அல்லது பின்னரோ அல்லது பரீட்சையின் எந்நிலையிலுமோ இவ்வறிவித்தலுக்கு அமைவாக தகைமையற்றவர் எனக் கண்டறியப்பட்டால் அவரின் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமை இரத்துச் செய்யப்படும்.

7.8 எழுத்துப் பரீட்சைக்கு அல்லது நேர்முகப் பரீட்சைக்கு அல்லது இவ்விரு பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு அரசினால் எந்தவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

08. **தெரிவு செய்யப்படும் முறை**

8.1 குறித்த வருடத்தில் சகல விவசாயப் பாடசாலைகளுக்கும் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கையினை அடிப்படையாகக் கொண்டு விண்ணப்பதாரிகளைக் கொண்டுள்ள ஒவ்வொரு மாவட்டங்களிலிருந்தும் விவசாயப் பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். அதன் பின்னர் குறித்த மாவட்டத்தின் விண்ணப்பதாரிகளிலிருந்து போட்டிப் பரீட்சையில் முதலாவது மற்றும் இரண்டாவது பாடங்களில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் கூட்டுத்தொகையின்அடிப்படையில் உயர் திறமை காட்டியுள்ள விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவர். அவ்வாறான தெரிவின் போது கீழ்க் காணும் விடயங்களும் கருத்தில் எடுக்கப்படும்.

8.2 மாவட்ட அடிப்படையில் மாணவர்களை தெரிவு செய்யும்போது க.பொ.த (சா/ த) பரீட்சைக்கு முதன் முறையாக தோற்றிய மாவட்டமே குறித்த விண்ணப்பதாரியின் மாவட்டமாக கருதப்படும். க. பொ. த. (சா/த) பரீட்சைக்கு முதன் முறையாக தோற்றிய மாவட்டத்தின் இலக்கத்தை கண்டறிந்து விண்ணப்பப்படிவத்தில் 4 ஆவது இலக்க வினாவினை பூர்த்தி செய்யவும். இதற்காக இவ்வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ள இணைப்பு 01 இனைப் பயன்படுத்தவும்.

8.3

- எழுத்து மூலப் பரீட்சையில் விவசாயம் மற்றும் விவேகப் பரீட்சை ஆகிய இரு வினாத்தாள்களிலும் பெற்ற புள்ளிகளின் கூட்டுத் தொகையின் அடிப்படையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் மாவட்ட அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்.

- சித்தியடைந்தவர்களின் பட்டியலின் மாவட்ட மட்ட தெரிவானது விண்ணப்பப்படிவத்தின் 5 ஆவது இலக்கவினாவிற்கு வழங்கப்படும் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். அதன்போது க.பொ.த. (உ/த) பரீட்சையில் உயிரியல் பிரிவில் அல்லது தொழில்நுட்பவியல் துறையில் கற்று ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தி பெற்றுள்ளதுடன் போட்டிப் பரீட்சையில் இரு பாடங்களிலும் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் கூட்டுத்தொகைக்கேற்ப கூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தவர்கள் முன்னுரிமை அடிப்படையில் முதலில் தெரிவு செய்யப்படுவர். குறித்த மாவட்டமொன்றில் அவ்வாறு சித்தியடைந்தவர்கள் இல்லாதவிடத்து அல்லது அவ்வாறான விண்ணப்பதாரிகள் போதியளவு காணப்படாதவிடத்து மாத்திரம் அம்மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளின் தொகைக்கு பொருந்தும் வகையில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரு பாடத்தில் அல்லது இரு பாடங்களில் சித்தியடைந்த,மாவட்டத்தை சேர்ந்த விண்ணப்பதாரிகளில் போட்டிப் பரீட்சையில் மிகத் திறமையாக சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவர்.

- இத்தெரிவு கட்டாயமாக 8.1,8.2 இல் குறிப்பிட்டபடி மாவட்ட அடிப்படையிலும் போட்டிப் பரீட்சையில் காட்டிய திறமையின் அடிப்படையில் விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு முறையில் மேற்கொள்ளப்படும். குறித்த வருடத்தில் ஒவ்வொரு விவசாயப் பாடசாலைக்கும் அனுமதிக்கப்படும் மாணவ, மாணவியர் தொகை அப்பாடசாலைகளில் ஆண்/பெண் விடுதி வசதிக்கேற்பவும், பயிற்சி வசதிக்கேற்பவும் தீர்மானிக்கப்படும். எனவே மாணவர் தெரிவின் போது போட்டிப் பரீட்சையின் இரண்டு பாடங்களிலும் பெற்ற கூட்டுப்புள்ளிகளின் வெட்டுப்புள்ளி மட்டம் குறித்த மாவட்டத்தில் ஆண், பெண் விண்ணப்பதாரிகளிடையே வேறுபடும்.

- ஏதாவதொரு மாவட்டமொன்றில் போதியளவு தகுதியுடைய மாணவர் தொகை காணப்படாதவிடத்து பாடசாலைகளின் அனுமதியை பூரணப்படுத்துவதற்காக தேவையான எண்ணிக்கையான விண்ணப்பதாரிகள் ஏனைய மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்படுவர். மேற்படி பாடநெறிக்கு விடுதி வசதி வழங்கப்படும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் விவசாயப் பாடசாலைகளில் நிலவும் ஏனைய வசதிகளின் அடிப்படையில் விடுதி வசதி வழங்கப்படாத மாணவர்களின் தெரிவு நடைபெறும்.

8.4 மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை கருத்திற் கொண்டு போட்டிப் பரீட்சையில் இரு பாடங்களிலும் கூடிய கூட்டுப் புள்ளிகளைப் பெற்ற குறித்த அளவான விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் அழைக்கப்படுவர். அவர்களின் கல்விச் சான்றிதழ்களையும் ஏனைய சான்றிதழ்களையும் பரீட்சிப்பதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரிகள் தங்களது சான்றிதழ்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பிக்க வேண்டும். நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது விவசாயப் பாடசாலைகளுக்குத் தெரிவு செய்யப்படும் எண்ணிக்கையை விட அதிகளவான விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

09. **"குசுமா லக்ஸ்மி கருணாதிலக்க" ஞாபகார்த்தப் புலமைப் பரிசில்**

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் எழுத்து மூல போட்டிப் பரீட்சையில், விவசாயம் மற்றும் விவேகப்பரீட்சை ஆகிய வினாத்தாள்களில் அதிகூடிய கூட்டுப் புள்ளியினைப் பெறும் பயிற்சியை மேற்கொள்ளும் பெண் விண்ணப்பதாரி ஒருவருக்கு மேற்படி புலமைப்பரிசிலானது அதன் விதிகளுக்கு அமைவாக 2 வருட காலத்திற்கு வழங்கப்படும். புலமைப்பரிசிலைப் பெற்றவருக்கு குண்டசாலை விவசாயக் கல்லூரியில் பயில சந்தர்ப்பம் வழங்கப்படும். இப் புலமைப்பரிசின் வருடாந்தப் பெறுமதி ரூபா 10,000 ஆகும்.

10. சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் வெளியிடப்படும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் மொழிகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது ஒவ்வாமைகள் காணப்படுகின்றது என கண்டறியப்படும் சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

விவசாயப் பணிப்பாளர் நாயகம்.

விவசாயத் திணைக்களம், பேராதனை.
2019, ஏப்பிறல் 09.

**இணைப்பு இல. 01**

மாவட்டங்களும் அவற்றுக்கான இலக்கங்களும்

(8.2 பந்திக்கு ஏற்புடையதாகும்)

| மாவட்ட இல. | மாவட்டம் |
|---|---|
| 1 | அனுராதபுரம் |
| 2 | பதுளை |
| 3 | மட்டக்களப்பு |
| 4 | கொழும்பு |
| 5 | காலி |
| 6 | யாழ்ப்பாணம் |
| 7 | கண்டி |
| 8 | குருநாகல் |
| 9 | மாத்தறை |
| 10 | திருகோணமலை |
| 11 | வவுனியா |
| 12 | இரத்தினபுரி |
| 13 | அம்பாந்தோட்டை |

| மாவட்ட இல. | மாவட்டம் |
|---|---|
| 14 | கம்பஹா |
| 15 | களுத்துறை |
| 16 | மாத்தளை |
| 17 | நுவரெலியா |
| 18 | மன்னார் |
| 19 | முல்லைத்தீவு |
| 20 | அம்பாறை |
| 21 | புத்தளம் |
| 22 | பொலன்னறுவை |
| 23 | மொணறாகலை |
| 24 | கேகாலை |
| 25 | கிளிநொச்சி |

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை விவசாயப் பாடசாலைகளில் விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறியினை பயில்வதற்காக 2020/2022 ஆம் கற்கையாண்டுக்காக மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை - 2019**

Competitive Examination for the Enrollment of Students to the Higher National Diploma in Agricultural Production Technology in Sri Lanka Schools of Agriculture for the Academic Year 2020/2022 - 2019

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

1.

| பரீட்சைக்கு தோற்றும் நகரம் | அதன் இலக்கம் |
|---|---|
| 1 ஆம் தெரிவு .................. | .......................... |
| 2 ஆம் தெரிவு ................. | .......................... |

(வர்த்தமானி அறிவித்தலின் 1 ஆவது பந்திக்கு அமைவாக)

2. பரீட்சைக்கு தோற்ற விரும்பும் மொழி மூலம்
சிங்களம் - 2
தமிழ் - 3

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்.)

3. பால் :
ஆண் - 0
பெண் - 1

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

4.

| க. பொ. த. (சா/த) பரீட்சைக்கு முதல் முறையாக தோற்றிய பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் .......................... | மாவட்ட இலக்கம் ............................. |
|---|---|

(8.2 பந்திக்கு ஏற்ப இணைப்பு : இல. 01 ஐப் பார்க்க)

5. க.பொ.த (உ/த) இல் உயிரியல்/தொழில்நுட்பவியல் பிரிவில் தோற்றி சித்தி பெற்றுள்ள பாடங்களின் எண்ணிக்கை (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)
ஓர் அமர்வில் மூன்று பாடங்கள் - 3
ஓர் அமர்வில் இரண்டு அல்லது ஒரு பாடம் - 2

சித்தியடைந்த பாட எண்ணிக்கைக்கேற்ப உரிய இலக்கம் ..........................

(3.1 பந்திக்கு அமைவாக)

6.(அ) i. முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----.

உதாரணம்: (HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDENA)

ii. இறுதியில் வரும் பெயர் முதலிலும் மிகுதிப்பெயர்களின் முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு :

உதாரணம் - (GUNAWARDENA H.M.S.K) :-----.

iii. முழுப்பெயர் (சிங்களம்/தமிழ்) :-----.

7. i. முகவரி :-----.
ii. பரீட்சைஅனுமதிப் பத்திரத்தினை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----.
iii. தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம் :- i. கையடக்க ☐☐☐☐☐☐☐☐☐☐
ii. நிரந்தர ☐☐☐☐☐☐☐☐☐☐

8. (அ) க.பொ.த (சா/த) பரீட்சைக்கு முதன் முறையாக தோற்றிய பாடசாலையின் பெயர் மற்றும் முகவரி :----.
(ஆ) க.பொ.த(சா/த) பரீட்சைக்கு முதன் முறையாக தோற்றிய பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் (தமிழில்) :----.
(இ) க.பொ.த(சா/த) பரீட்சைக்கு முதன் முறையாக தோற்றிய பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் (ஆங்கிலத்தில்) :----.

9. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :- ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

10. பிறந்த திகதி : ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

11. 2019.05.21 ஆந் திகதி அன்று வயது : வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

12. கல்வித் தகைமைகள் (இப்பகுதியை பூரணப்படுத்தமுன் வர்த்தமானி அறிவித்தலை கவனமாக வாசித்தல் வேண்டும்.)

(அ) வர்த்தமானி அறிவித்தலின் 3.1 ஆம் பந்திக்கு ஏற்ப க. பொ. த. (சா. த.) பரீட்சையில் விண்ணப்பதாரி சித்தியடைந்த ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்கள் :

| சுட்டெண் | வருடமும் மாதமும் | சித்தியடைந்த பாடங்கள் | பாட எண் | சித்தியடைந்த தரம் |
|---|---|---|---|---|
| | | 1. தமிழ் | | |
| | | 2. கணிதம் | | |
| | | 3. விஞ்ஞானம் | | |
| | | 4. | | |
| | | 5. | | |
| | | 6. | | |
| | | 7. | | |
| | | 8. | | |
| | | 9. | | |
| | | 10. | | |
| | | 11. | | |

(ஆ) க.பொ.த(உ/த) பரீட்சையில் உயிரியற் பிரிவில்/தொழில்நுட்பவியல் பிரிவில் தோற்றினீரா?

உயிரியல் பிரிவு ☐
தொழில்நுட்பவியல் பிரிவு ☐

(தேவையான இடத்தில் √ அடையாளமிடவும்)

(இ) க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்கள்

| சுட்டெண் | வருடமும் மாதமும் | சித்தியடைந்த பாடங்கள் | பாட எண் | சித்தியடைந்த தரம் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

(உ) மேலேயுள்ள தகைமைகளை உறுதிப்படுத்த சான்றிதழின் நிழற்படப் பிரதிகளை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பவும். (மூலப்பிரதியை அனுப்பத் தேவையில்லை.)

13. பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயரும், முகவரியும் :----.
(தமிழில்)

14. பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் விபரங்கள்:
14.1 பற்றுச்சீட்டு வழங்கப்பட்ட திகதியும் கிளையும் :----.

| |
|---|
| பற்றுச்சீட்டின் மேல் விளிம்பை மாத்திரம் இங்கு பசையால் ஒட்டுதல் வேண்டும்.<br>அதன் நிழற்படப் பிரதியொன்றை கட்டாயமாக தம்வசம் வைத்துக் கொள்ளவும். |

பரீட்சார்த்தியின் உறுதியுரை:

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். நான் க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தியடைந்துள்ளதாகவும் தமிழ், விஞ்ஞானம், கணிதம் என்பவற்றுக்கு திறமைச் சித்தியும் இன்னுமொரு பாடத்தில் திறமைச் சித்தியும், உயர் தரத்தில் உயிரியற் பிரிவில்/தொழில்நுட்பவியல் பிரிவில் பயின்று வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட தகைமைகளை பெற்றுள்ளேன் எனவும் உறுதியளிக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் கண்டறியப்படுமிடத்து நான் இப்போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமையினை இழப்பதுடன் இலங்கை விவசாயப் பாடசாலைக்கு தெரிவு செய்யப்படுவதற்கு பொருத்தமற்றவனாவேன் என்பதையும் அறிவேன். மேலும் பரீட்சையினை நடாத்தல் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அமுல்படுத்தப்படும் சட்ட திட்டங்களுக்கு உடன்படுகின்றேன் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி :----.

-----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்

**கல்வித் தகைமைகளையும் கையொப்பத்தையும் உறுதிப்படுத்தல்**

(திணைக்களத் தலைவர் ஒருவரால், அரச பாடசாலை அதிபர் ஒருவரால், ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவரால், பிரிவிற்கு பொறுப்பான கிராம அலுவலரால், சமாதான நீதவான் ஒருவரால், சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவரினால், சட்டத்தரணி ஒருவரினால், பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால்,முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரால், அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் நிரந்தர பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவரினால், பௌத்த விகாரை ஒன்றின் விகாராதிபதி அல்லது பிரதான மதகுரு ஒருவரினால், ஏனைய மத வழிபாட்டுத்தலம் ஒன்றிற்கு பொறுப்பான பிரதான மதகுரு அல்லது விஷேட நிலையில் உள்ள மதபோதகர் ஒருவரினால் இவ்விண்ணப்பப்படிவத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.)

மேலே கையொப்பமிட்ட திரு./ திருமதி / செல்வி .................................................. என்பவரை நான் நன்கு அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டாரென்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். மேலும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) தகைமைகளைப் பெற்றுள்ளார் என வர்த்தமானி அறிவித்தலையும் கல்விச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை பரீட்சித்து அத்தாட்சிப்படுத்துகின்றேன். மேலும் உரிய பரீட்சைக் கட்டணங்களை செலுத்தியுள்ளார் என்பதனையும் அதற்கான பற்றுச்சீட்டை உரிய இடத்தில் ஒட்டியுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்
பதவி முத்திரை

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

4-692

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.